# பேராதனைப் பல்கலைக் கழகம் – வெளிநிலைப் பரீட்சைகள்

## கலைமாணி பட்டம்

## 1991

## தமிழ் பாடத்திட்டம்

### தேர்வுத் திட்டம்

பொதுக் கலைமாணித் தேர்வுக்கு ஒரு பாடமாக வழங்கப்படும் தமிழின் தேர்வு ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலயங்களைக் கொண்ட மூன்று வினாத்தாள்களை உடையதாகும். அவை முறையே:

| | |
|---|---|
| தமிழ் I (TG I) | தமிழ்மொழி வரலாறும் இலக்கண மரபுகளும் |
| தமிழ் II (TG 2) | விதிக்கப்பட்ட பாடநூல்கள் (இலக்கிய வளர்ச்சியினை நோக்காகக் கொண்டது.) |
| தமிழ் III (TG 3) | சோழர் காலம் முதல் நவீன காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும். |

### தமிழ் I (TG 1) : தமிழ்மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்:

இலக்கிய ஆக்கங்கள் இலக்கண நூல்கள், சாசனங்கள் ஆகியவற்றின் வாயிலாக உணர்த்தப்படும் தமிழ்மொழியின் பரிணாமமும் வளர்ச்சியும் பற்றிய வினாக்களைக் கொண்டதாக வினாத்தாள் அமையும். தமிழ்மொழியின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் பொருளியல் என்பனவற்றை உணரும் பொருட்டு வரலாற்று மொழியியலின் கோட்பாடுகளையும் உத்திகளையும் பயன்படுத்துவதாகத் தமிழ்மொழி வளர்ச்சி ஆய்வுகள் அமைவன. மொழி மாற்றங்கள், பிறமொழிகளிலிருந்து கடன் பெறுதல், ஏனைய குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகியன சிறப்பாக நோக்கப்படுவன.

தமிழிலுள்ள இலக்கணக் கோட்பாடுகள் பற்றி மாணாக்கர் போதிய அறிவுடையவராக இருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொல்காப்பியம்,

உணர்த்தப்படும் மொழி மாற்றங்களும் மரபுகளும் நுண்மையாக நோக்கப் படுதல் இவ்வினாத்தாளில் முக்கிய அம்சமாகும்.

தமிழ் வரிவடிவின் பரிணமம் பற்றிய அறிவும் சாசனங்களின் வரலாற்று மொழியியற் பெறுமதி பற்றிய தெளிவும் முக்கியமானவையாகக் கருதப் படுகின்றன.

## தமிழ் I (TG 2): விதிக்கப்பட்ட பாடநூல்கள் (இலக்கிய வளர்ச்சியினை நோக்காகக் கொண்டது)

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்த, விதிக்கப்பட்ட பாடநூல்கள் பற்றியனவாக இவ்வினாத்தாளின் கேள்விகள் அமைவன. விதிக்கப் பட்ட பாடநூல்கள் வளர்ச்சியின் முக்கிய போக்குகளை உணர்த்த உதவுவன. பாடநூல்கள் இவை தோன்றிய காலப் பின்னணியின் அடிப்படையிலே கற்கப்பட வேண்டும். அவற்றின் பொருள் கருத்து நடை முதலான சிறப்பியல்புகளுக்கு மட்டுமன்றி அவற்றின் பரம்பலுக்கும் பன்முக வளர்ச்சிக்கும் முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். தமிழ் இலக்கியத்தின் குறிப்பிட்ட கால கட்டங்கள் பற்றிய போதிய அறிவு முக்கியமானது.

மாணக்கர் விதிக்கப்பட்ட பாடநூல்களிலிருந்து தரப்படும் பகுதிகளை நவீன உரைநடையில் எழுதுவதோடு அப்பாட நூல்கள் உணர்த்தும் இலக்கிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட வினாக்களுக்கு விடைதரவும் ஆற்றலுள்ள-வராதல் வேண்டும்.

## தமிழ் II (TG 2) : சோழர் காலம் முதல் நவீன காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்

சோழர் காலம் முதல் நவீன காலம் வரையிலான தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியும் அதன் பரிணமத்தின் பிரதான போக்குகளும் இவ்வினாத்தாளின் பகுதியாக அமைவன. இவ்வினாத்தாளில் பல்வேறுபட்ட கால கட்டங்களின் சமுக பொருளாதாரப் பின்னணி, இலக்கிய வடிவங்களின் வளர்ச்சி, காலப்

நடை, கருத்துக்கள், பொருள்கள் பண்புகள் முதலானவற்றையும் பிற சிறப்பியல்புகளையும் மாணக்கர் வகுத்துக் காட்டும் ஆற்றல் உள்ளவராதல் வேண்டும்.

நவீன இயக்கத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் தமிழ் உரை நடையின் பரிணமம் பற்றியும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

இலக்கியக் கோட்பாட்டுக்கல்வி இவ்விருந்தாளில் முக்கிய இடம்பெறும். இலக்கியக் கோட்பாட்டுக் கல்வியிலே பழைய இலக்கிய இலக்கண நூல்கள் மத்தியகால உரைகள் நவீன தமிழ் நூல்கள் ஆகியனவற்றிலே காணப்படும் இலக்கிய கோட்பாடுகள் பற்றிய ஆய்வுகள் மேனுட்டு முக்கிய இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய ஒப்பியல் ஆய்வு தமிழ் இலக்கியத் திறனய்வு அணுகுமுறைகள் இலக்கியம் தொடர்பான அடிப்படைக் கருதுகோள்கள் என்பன முக்கிய கவனத்தைப் பெறுதல் வேண்டும்.

<u>விதிக்கப்பட்ட பாடநூல்கள்:</u>

<u>TG 2</u>

புறநானூறு, செய்யு. 1 - 20
அகநானூறு, செய்யு. 1 - 10
திருக்குறள், அரசியல்
நாச்சியார் திருமொழி, திருமொழி 1 - 7
பெரியபுராணம், கண்ணப்பநாயனர் புராணம்
சீரு புராணம் பாதைபோந்த படலம்
சுப்பிரமணியபாரதி பாடல்கள்: குயில்பாட்டு, சுயசரிதை
ந. சிவஞானசுந்தரம் (இலங்கையர்கோன்): வெள்ளிப் பாதசரம்

<u>பரிந்துரைக்கப்படும் நூல்கள்:</u>

| | | |
|---|---|---|
| <u>TG 1</u> | ஆர். கால்டுவெல்: | திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் (ஆங்கிலம்) |
| | ரி. பரே: | திராவிட மொழியியல் கட்டுரைத் தொகுப்பு (ஆங்கிலம்) |

தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்: தமிழ்மொழி வரலாறு (ஆங்கிலம்)

எம்.பி.எமனோ: இந்தியாவும் வரலாற்று இலக்கணமும் (ஆங்கிலம்)

டப்ள்யூ.பி.லேமன்: வரலாற்றுமொழியியல்: அறிமுகம் (ஆங்கிலம்)

பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி: தமிழ் இலக்கணக் கோட்பாடுகளின் வரலாறு (ஆங்கிலம்)

சி.சிவராமமூர்த்தி: வரிவடிவவியலும் தென்னிந்திய வரிவடிவங்களும் (ஆங்கிலம்)

வி. கன்னையா: இந்தியாவிலும் அதனைச் சுற்றியுமுள்ள வரிவடிவங்கள் (ஆங்கிலம்)

தி.நா.சுப்பிரமணியம்: பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

ஆ.வேலுப்பிள்ளை: சாசனமும் தமிழும்

ஆ.வேலுப்பிள்ளை: வரலாற்றுத் தமிழ் இலக்கணம்

<u>TG 3</u> சி.ஜேசுதாசன், ஹெ.ஜேசுதாசன்: தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்)

கே.ஏ.நீலகண்டசாஸ்திரி: சோழர் (ஆங்கிலம்)

எஸ்.வையாபுரிப்பிள்ளை: காவிய காலம்

தி.வை.சதாசிவபண்டாரத்தார்: தமிழ் இலக்கிய வரலாறு (13ம், 14ம், 15ம் நூற்றாண்டுகள்)

எஸ்.சோமசுந்தரதேசிகர்: தமிழ்புலவர்கள் வரலாறு: (16ம் நூற்றாண்டு).

எஸ்.சோமசுந்தரதேசிகர்: தமிழ்ப் புலவர்கள் வரலாறு 17ம் நூற்றாண்டு)

மயிலை சீனி வேங்கடசாமி: பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமில் இலக்கியம்.

ம.இராமலிங்கம்: இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

ஏ.வி.சுப்பிரமணிய ஐயர்: தற்காலத் தமிழ் இலக்கியம்

வி.செல்வநாயகம்: தமிழ் உரைநடை வரலாறு

பி.கோதண்டராமன்: இலக்கியமும் விமர்சனமும்

ஆர்.வெல்லெக், ஏ.வாறன்: இலக்கியக் கொள்கை

டப்ளியூ.கே.விம்சற், சி.புறூக்ஸ்: இலக்கிய விமர்சனம் (ஆங்கிலம்)